# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC.107/2023 | Date | : | 06-05-2026 |
| Deposition of Witness for | : | **அ.சா.5** | Taluk | : | |
| Name | : | **திருமுருகன்** | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.05.2026.

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09-09-2022ம் தேதி, 14.45 மணிக்கு நான் சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கள்ளக்குறிச்சி மாவட்டம், வெள்ளிமலை வட்டம், கரியனூர், மாவடிபட்டியை சேர்ந்த சடையன் மகன் ஏழுமலை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரின் பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.319/2022, சட்டப்பிரிவுகள் 279, 337 இதச-ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையை, வாதியின் புகாருடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து, இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2) பின்னர், அன்றைய தினமே, மாலை சுமார் 15.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுரேஷ்குமார் மற்றும் ராஜசேகரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவயிட சாட்சிகள் ராஜேஷ்குமார் மற்றும் விபத்தில் காயம்பட்ட சூர்யா, ஆனந்தராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி அய்யாவு, த/பெ.செல்லப்பன் என்பவர் TN 52 C 4462 என்ற பதிவு எண் கொண்ட TATA ACE வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து எதிரி அய்யாவு, த/பெ.செல்லப்பன் என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 12.09.2022 ஆம் தேதி, பிற்பகல் சுமார் 01.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையம் முன்பு வைத்து கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்தேன்.

4) பின்னர், கடந்த 12-09-2022 ம் தேதி, இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN 52 C 4462 என்ற பதிவு எண் கொண்ட TATA ACE வாகனம் மற்றும் கடந்த 14-09-2022 ம் தேதி, விபத்திற்குள்ளான TN 10 BL 2203 என்ற பதிவு எண் கொண்ட Pulsar NS 200 இருசக்கர வாகனம் ஆகியவற்றை வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை கடந்த 04-11-2022 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகளை பெற்றேன். ( **TN 52 C 4462 என்ற பதிவு எண் கொண்ட**

**TATA ACE வாகனம் மற்றும் TN 10 BL 2203 என்ற பதிவு எண் கொண்ட Pulsar NS 200 இருசக்கர வாகனம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) பின்னர், அன்றைய தினமே, விபத்தில் காயமடைந்த ராஜேஷ்குமார், சூர்யா மற்றும் ஆனந்தராஜ் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த ஈரோடு மணியன் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை மருத்துவர் திரு.செந்தில்குமரன், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ராஜேஷ்குமார், சூர்யா மற்றும் ஆனந்தராஜ் ஆகியோரின் விபத்து பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் பெற்றேன். **(ராஜேஷ்குமார், சூர்யா மற்றும் ஆனந்தராஜ் ஆகியோரின் விபத்து பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.7 முதல் அ.சா.ஆ.9 வரையாக குறியீடு செய்யப்படுகிறது).**

6) பின்னர், ராஜேஷ்குமார், சூர்யா மற்றும் ஆனந்தராஜ் ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்றுகள் வழங்கியதால் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 338 (3 Counts) இதச- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 338 (3 Counts) இதச-ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை** :

1) விபத்தில் காயம்பட்ட இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த சூர்யாவிற்கு

ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் என்னிடம் ஒப்படைக்கவில்லை. விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த சூர்யா, அந்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். சம்பவம் கோவை to சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் இடது ஓரமாக தடுப்பு சுவர் அருகே தான் நடந்ததாக தான் மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) கோவை to சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலை இருவழிச்சலை என்றால் சரிதான். கோவை to சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலை என்பதால் சேலம் to கோவை சென்ற எதிரியின் வாகனம் எதிரே வருவதற்க்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, எதிரே வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது. விபத்தில் அடிப்பட்ட நபர்கள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சார்ந்தவர்கள் என்றும், அவர்கள் கோவை மாவட்டத்தில் உள்ள ஈசா யோகா மையத்திற்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

3) விபத்தில் அடிப்பட்டவர்கள் நெடுந்தூரம் இருசக்கர வாகனத்தில் பயணித்தன் காரணமாக சோர்வு ஏற்பட்டு சாலையின் ஓரமாக உள்ள தடுப்பு சுவரில் மோதியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு விபத்து ஏற்படவில்லை என்றும், விபத்தில் அடிப்பட்டவர்களுக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டி பொய் புகார் பெற்று, நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Thirumurugan